மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதுபற்றித் தனிக் கேள்வி கேட்கவும்.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவரவர்களே, சென்னை நகரில் உள்ள கூவம் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது என்று சொல்லிக் கொள்கிறார்களே, அதைத் தடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி ஒன்றும் நாளுக்கு நாள் கூவம் ஆற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை பெருகுவதாகத் தகவல் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த விவர அறிக்கையில் தீ விபத்துகளால் இறந்தவர்கள் 120 பேர் என்று சொல்லப் பட்டிருக்கிறதே, அது வீடுகள் எரிந்ததால் ஏற்பட்ட தீ விபத்துக்களா அல்லது தற்கொலை விபத்துக்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த விபத்துகளில், வீடுகள் எரிந்ததால் ஏற்பட்ட விபத்துகளும் உண்டு. சில தற்கொலைக்காகத் தீ வைத்துக்கொண்டவைகளும் உண்டு. சில பேர் அடுப்படியில் வேலை செய்துகொண்டிருந்தபோது ஸ்டவ் வெடித்து இறந்த விபத்துகளும் உண்டு.

Industrial Liaison Board

* 51 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to set up an Industrial Liaison Board consisting of representatives of Industries and Technical Educational Institutions in this State; and

(*b*) if so, the functions of the Board?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தொழில் தொடர்பு வாரியம் இம்மாநிலத்தில் ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ளது.

(இ) அறிக்கையொன்று@ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

@ 143-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

THIRU N. K. PALANISWAMY: Sir, may I know whether the Board is functioning and if so, whether its recommendations are advisory or mandatory?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த வாரியத்தைப் பொறுத்தவரையில் ஆலோசனை என்ற முறையில் தான் வழங்கி வருகிறது. ஆனால் இரு சாராரும் அதை நிறைவேற்ற வேண்டுமென்ற தன்மையின் அடிப்படையில் அது நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஓரளவுக்கு நல்ல முறையில் அது பணியாற்றி வருகிறது.

உயர்நிலைப் பள்ளிப் பாடத்திட்டம்.

*52. வினா—**திரு. சு. துரைசாமி :**
திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிப் பாடத் திட்டத்தில் மாறுதல் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 6–8 வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்ட வரைவு அரசிதழில் 1972 சனவரியில் வெளியிடப்பட்டது. ஆறும் வகுப்பில் 1973-74 முதல் மொழிகள், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களுக்கான புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. ஆறும் வகுப்பில் பிற பாடங்களுக்கும் 7–8 வகுப்புகளுக்கும் புதிய பாடத் திட்டம் எவ்வாண்டு முதல் நடைமுறைக்கு வரும் என்பதுகுறித்து இன்னும் இறுதியாக முடிவு செய்யவில்லை. 9–11 வகுப்புகளுக்கான புதிய பாடத் திட்ட வரைவு விரைவில் வெளியிடப்படும். பள்ளிக் கல்வி 11 ஆண்டு ஆக இருக்க வேண்டுமா அல்லது 10 ஆண்டு ஆக இருக்க வேண்டுமா என்று முடிவு செய்த பின்னரே இதுகுறித்து நடவடிக்கை எடுக்க இயலும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS